10ஆம் வகுப்பு

# அரசு பொதுத்தேர்வு - ஏப்ரல் 2024

பதிவு எண்.

Part - III

# சமூக அறிவியல் (விடைகளுடன்)

கால அளவு : 3.00 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறைபாடு இருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** இவ்வினாத்தாள் **நான்கு** பகுதிகளைக் கொண்டது.

## பகுதி - I

**குறிப்பு:** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

(ii) கொடுக்கப்பட்ட **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**(14 × 1 = 14)**

**1.** ஜெர்மனியோடு மியூனிச் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட பிரிட்டன் பிரதமர் யார்?

(அ) சேம்பர்லின்

(ஆ) வின்ஸ்டன் சர்ச்சில்

(இ) லாயிட் ஜார்ஜ்

(ஈ) ஸ்டேன்லி பால்டுவின்

**2.** மார்ன் போர் எதற்காக நினைவு கூறப்படுகிறது?

(அ) ஆகாயப் போர்முறை

(ஆ) பதுங்குக் குழிப் போர்முறை

(இ) நீர்மூழ்கிக் கப்பல் போர்முறை

(ஈ) கடற்படைப் போர்முறை

**3.** விதவை மறுமணச் சங்கத்தை ஏற்படுத்தியவர் ............... .

(அ) மகாதேவ் கோவிந்த் ரானடே

(ஆ) தேவேந்திரநாத் தாகூர்

(இ) ஜோதிபா புலே (ஈ) அய்யன்காளி

**4.** எந்த ஆண்டு வார்சா ஒப்பந்தம் கலைக்கப்பட்டது?

(அ) 1979 (ஆ) 1989 (இ) 1990 (ஈ) 1991

**5.** ஜப்பானியக் கப்பற்படை அமெரிக்க கப்பற்படையால் எங்கே தோற்கடிக்கப்பட்டது?

(அ) க்வாடல்கெனால் போர்

(ஆ) மிட்வே போர்

(இ) லெனின்கிரேடு போர்

(ஈ) எல் அலாமெய்ன் போர்

**6.** ஆறுகளின் மூலம் உருவாகும் மண் :

(அ) செம்மண் (ஆ) கரிசல் மண்

(இ) பாலை மண் (ஈ) வண்டல் மண்

**7.** பழவேற்காடு ஏரி ................ மாநிலங்களுக்கிடையே அமைந்துள்ளது.

(அ) மேற்கு வங்காளம் மற்றும் ஒடிசா

(ஆ) கர்நாடகா மற்றும் கேரளா

(இ) ஒடிசா மற்றும் ஆந்திரப்பிரதேசம்

(ஈ) தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசம்

**8.** பின்னடையும் பருவக்காற்று ............. லிருந்து ஈரப்பதத்தை எடுத்துக் கொள்கிறது.

(அ) அரபிக்கடல் (ஆ) வங்கக்கடல்

(இ) இந்தியப்பெருங்கடல் (ஈ) தைமூர்க் கடல்

**9.** இந்தியாவின் முதல் மக்கள்தொகை கணக்கெடுப்பு ............... ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.

(அ) 1991 (ஆ) 1881 (இ) 1872 (ஈ) 2011

**10.** பருவக்காற்று காடுகள் ............. எனவும் அழைக்கப்படுகின்றன.

(அ) அயன மண்டல பசுமை மாறாக் காடுகள்

(ஆ) இலையுதிர்க் காடுகள்

(இ) மாங்குரோவ் காடுகள்

(ஈ) மலைக் காடுகள்



enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com
www.surabooks.com



11. எந்த இரு நாடுகளுக்கிடையே பஞ்சசீல ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது?
(அ) இந்தியா மற்றும் நேபாளம்
(ஆ) இந்தியா மற்றும் பாகிஸ்தான்
(இ) இந்தியா மற்றும் சீனா
(ஈ) இந்திய மற்றும் ஸ்ரீலங்கா

12. மாநில அமைச்சரவையின் தலைவர் :
(அ) முதலமைச்சர் (ஆ) ஆளுநர்
(இ) சபாநாயகர் (ஈ) பிரதம அமைச்சர்

13. காட் (GATT)-இன் முதல் சுற்று நடைபெற்ற இடம்:
(அ) டோக்கியோ (ஆ) உருகுவே
(இ) டார்குவே (ஈ) ஜெனீவா

14. இந்தியாவில், உலகளாவிய பொது வழங்கல் முறையை ஏற்றுக் கொண்ட ஒரே மாநிலம் .............. .
(அ) கேரளா (ஆ) ஆந்திரப்பிரதேசம்
(இ) தமிழ்நாடு (ஈ) கர்நாடகா

## பகுதி - II

**குறிப்பு :** **எவையேனும்** 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 28-க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **($10 \times 2 = 20$)**

15. முத்துத் துறைமுக நிகழ்வைப் பற்றி எழுதுக.
16. திருநெல்வேலி எழுச்சி பற்றி ஒரு குறிப்பு வரைக.
17. “டாலர் ஏகாதிபத்தியம்” - வரையறுக்கவும்.
18. பெரியாரை ஒரு பெண்ணியவாதியாக மதிப்பிடுக.
19. பிரம்ம சமாஜத்தால் ஒழிக்கப்பட்ட சமூகத் தீமைகளைப் பட்டியலிடுக.
20. கரிசல் மண்ணின் ஏதேனும் இரண்டு பண்புகளைக் கூறுக.
21. கடற்கரைச் சமவெளி எவ்வாறு உருவாகிறது?
22. தமிழ்நாட்டின் வேளாண் பருவக் காலங்களை எழுதுக.
23. ‘பருவமழை வெடிப்பு’ என்றால் என்ன?
24. மாங்கனீசின் பயன்களைக் குறிப்பிடுக.
25. இந்தியக் குடியரசுத் தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?
26. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களை எழுதுக.
27. உலகமயமாக்கலின் நேர்மறையான தாக்கங்கள் எவையேனும் இரண்டினை எழுதுக.
28. சென்னை “ஆசியாவின் டெட்ராய்ட்” என்று அழைக்கப்படுவது ஏன்?

## பகுதி - III

**குறிப்பு :** **எவையேனும்** 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 42-க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **($10 \times 5 = 50$)**

29. கோடிட்ட இடங்களை நிரப்புக.
(i) ‘இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர் ........... ஆவார்.
(ii) கிழக்குத் தொடர்ச்சி மலையின் தென் பகுதியில் உள்ள உயரமான சிகரம் ............ ஆகும்.
(iii) மாநிலங்களவை உறுப்பினர்களின் பதவிக்காலம் ............ ஆண்டுகளாகும்.
(iv) நாசிச ஜெர்மனியின் ரகசியக் காவல்படை ............. என அழைக்கப்பட்டது.
(v) இந்தியாவில் ............. துறை முதன்மைத் துறையாகும்.

30. பன்னாட்டுச் சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக.
31. இந்தியாவின் பிரிவினைக்குப் பின்னால் இருந்த காரணங்களை விவாதிக்கவும்.
32. (அ) வேறுபடுத்துக.
(i) வேளாண் சார்ந்த மற்றும் கனிமம் சார்ந்த தொழிலகங்கள்
(ii) உள்நாட்டு வணிகம் மற்றும் பன்னாட்டு வணிகம்.
(ஆ) காரணம் கூறுக.
வடஇந்திய ஆறுகள் வற்றாத ஆறுகள்.
33. அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடுக.
34. இமயமலையின் உட்பிரிவுகளையும், இந்தியாவிற்கு அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரிக்கவும்.
35. நகரமயமாக்கம் என்றால் என்ன? அதன் சிக்கல்களை விவரிக்கவும்.
36. இந்தியாவில் உள்ள பருத்தி நெசவாலைகளின் பரவல் பற்றி எழுதுக.
37. 1857-ஆம் ஆண்டின் பெரும் புரட்சிக்கான காரணங்கள் குறித்து ஆராயவும்.
38. வெளியுறவுக் கொள்கையை நிர்ணயிக்கும் அடிப்படைக் காரணிகள் எவை?

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com
www.surabooks.com



**39.** மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) கணக்கிடும் முறைகள் யாவை? அவைகளை விவரிக்கவும்.

**40.** கருப்பு பணம் என்றால் என்ன? அதற்கான காரணங்களை எழுதுக.

**41.** கீழ்க்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக:

1920 முதல் 1940 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட முக்கிய நிகழ்வுகள் ஏதேனும் ஐந்தினை காலக்கோட்டில் எழுதுக.

**42.** உலக வரைபடத்தில் பின்வரும் இடங்களைக் குறிக்கவும்.

(i) கிரீஸ்
(ii) துருக்கி
(iii) ஹிரோஷிமா
(iv) மாஸ்கோ
(v) சான்பிரான்சிஸ்கோ

## பகுதி - IV

**குறிப்பு :** பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும். **(2 × 8 = 16)**

**43.** (அ) முதல் உலகப்போருக்கான முக்கியக் காரணங்களை விவரிக்கவும்.

**(அல்லது)**

(ஆ) கிழக்கிந்திய கம்பெனியாரை எதிர்த்து வீரபாண்டிய கட்டபொம்மன் நடத்திய வீரதீரப் போர்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

**44.** (அ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.

(i) சோட்டா நாகபுரி பீடபூமி
(ii) காரகோரம்
(iii) மலைக் காடுகள்
(iv) அதிக மழை பெறும் பகுதி
(v) பாலை மண்
(vi) ஹிராகுட் அணை
(vii) அகத்தியல் மலை உயிர்கோளப் பெட்டகம்.
(viii) பருத்தி விளையும் பகுதி.

(அல்லது)

(ஆ) கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.

(i) வைகை ஆறு
(ii) கேரளா
(iii) தேயிலை விளையும் பகுதி
(iv) சோழமண்டல கடற்கரை
(v) காகித தொழிலகம்
(vi) துறைமுகம் (ஏதேனும் ஒன்று)
(vii) சென்னை
(viii) மன்னார் வளைகுடா

# விடைகள்

## பகுதி - I

1. (அ) சேம்பர்லின்
2. (ஆ) பதுங்குக் குழிப் போர்முறை
3. (அ) மகாதேவ் கோவிந்த் ரானடே
4. (ஈ) 1991
5. (ஆ) மிட்வே போர்
6. (ஈ) வண்டல் மண்
7. (ஈ) தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசம்
8. (ஆ) வங்கக் கடல்
9. (இ) 1872
10. (ஆ) இலையுதிர்க் காடுகள்
11. (இ) இந்தியா மற்றும் சீனா
12. (அ) முதலமைச்சர்
13. (ஈ) ஜெனீவா
14. (இ) தமிழ்நாடு

## பகுதி - II

**15.** (i) 1941 டிசம்பரில் ஹவாயிலுள்ள அமெரிக்கக் கப்பற்படைத்தளமான முத்துத் துறைமுகத்தின் மீது ஜப்பானிய விமானப்படைகள் முன்னறிவிப்பின்றி பெரும்தாக்குதலைத் தொடுத்தன.

(ii) அமெரிக்காவின் பசிபிக் கப்பற்படையை முடக்கிவிட்டால் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மீது படையெடுக்கும் போது எதிர்ப்பேதும் இருக்காது என ஜப்பான் நினைத்ததே இதற்குக் காரணமாகும். இத்தாக்குதலில் பல போர்க்கப்பல்களும், போர் விமானங்களும் அழிக்கப்பட்டன. அமெரிக்க வீரர்கள் பலர் கொல்லப்பட்டனர்.

(iii) இதனைத் தொடர்ந்து அமெரிக்கா ஜப்பான் மீது போர்ப் பிரகடனம் செய்தது.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com
www.surabooks.com



**16.** (i) திருநெல்வேலியிலும் தூத்துக்குடியிலும் நூற்பாலைத் தொழிலாளர்களை அணி திரட்டுவதில் வ.உ.சி., சுப்பிரமணிய சிவாவின் தோளோடு தோள் நின்றார்.

(ii) இந்நிகழ்வு நடைபெற்ற அதே சமயத்தில் பிபின் சந்திரபால் விடுதலை செய்யப்பட்டார்.

(iii) தலைவர்கள் இருவரும் அரசு துரோகக் குற்றம் சாட்டப்பட்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டனர். மக்கள் செல்வாக்கு பெற்ற இவ்விரு தலைவர்களும் கைது செய்யப்பட்ட செய்தி பரவியதில் திருநெல்வேலியில் கலகம் வெடித்தது.

(iv) காவல் நிலையம், நீதிமன்றம், நகராட்சி அலுவலகக் கட்டடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. காவலர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் நான்கு நபர்கள் கொல்லப்பட்டனர்.

**17.** டாலர் ஏகாதிபத்தியம் என்ற சொல் தொலைதூர நாடுகளுக்குப் பொருளாதார உதவி செய்வதன் மூலம் அவற்றின் மீது ஆதிக்கம் செலுத்தவும், தக்கவைத்துக் கொள்ளவும், அமெரிக்கா பின்பற்றியக் கொள்கையை விளக்குவதற்குப் பயன்படுத்தப்படுவதாகும்.

**18.** (i) பெரியார் குழந்தைத் திருமணத்தையும் தேவதாசி முறையையும் கண்டனம் செய்தார்.

(ii) பெண்களுக்கு விவாகரத்து பெறுவதற்கும், சொத்தில் பங்கு பெறுவதற்கும் உரிமை உண்டு என ஆணித்தரமாக வலியுறுத்தினார்.

(iii) "திருமணம் செய்து கொடுப்பது" எனும் வார்த்தைகளுக்கு பதிலாக திருக்குறளில் இருந்து எடுக்கப்பட்ட வாழ்க்கைத் துணை என்ற வார்த்தையை பயன்படுத்த வேண்டினார்.

(iv) பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கப்படுவது அவர்களுக்குச் சமூகத்தில் நன்மதிப்பையும், பாதுகாப்பையும் வழங்கும் என பெரியார் நம்பினார்.

**19.** பிரம்ம சமாஜத்தால் ஒழிக்கப்பட்ட சமூகத் தீமைகள் உடன்கட்டை ஏறுதல், (சதி) குழந்தைத் திருமணம், பலதாரமணம் முதலியன.

**20.** **கரிசல் மண்ணின் பண்புகள் :**

(i) கால்சியம், மக்னீசியம், கார்போனேட்டுகள், அதிக அளவிலான இரும்பு, அலுமினியம், சுண்ணாம்பு மற்றும் மாங்கனீசு ஆகியன காணப்படுகின்றன.

(ii) ஈரமாக இருக்கும்போது சேறாகவும், ஈரப்பதத்தை நீண்ட நேரம் தக்க வைத்துக் கொள்ளும் தன்மையும் உடையது.

**21.** (ii) தமிழ்நாட்டின் கடற்கரைச் சமவெளியானது கோரமண்டல் அல்லது சோழமண்டல சமவெளி (சோழர்கள் நிலம்) எனவும் அழைக்கப்படுகிறது.

(ii) இச்சமவெளி சென்னை முதல் கன்னியாகுமரி வரை நீண்டுள்ளது.

(iii) இச்சமவெளி கிழக்கு நோக்கிப் பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கும் ஆறுகளால் உருவாக்கப்பட்டுள்ளது.

**22.**

| பருவம் | விதைக்கும் காலம் | அறுவடை காலம் | முக்கிய பயிர்கள் |
|---|---|---|---|
| சொர்ணவாரி (சித்திரைப் பட்டம்) | ஏப்ரல் – மே | ஆகஸ்டு – செப்டம்பர் | பருத்தி மற்றும் தினை வகைகள் |
| சம்பா (ஆடிப்பட்டம்) | ஜுலை – ஆகஸ்டு | ஜனவரி – பிப்ரவரி | நெல் மற்றும் கரும்பு |
| நவரை | நவம்பர் – டிசம்பர் | பிப்ரவரி – மார்ச் | பழங்கள், காய்கறிகள், வெள்ளரி, தர்பூசணி |

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com
www.surabooks.com



**23.** (i) தென்மேற்கு பருவக்காற்று தொடங்குவதற்கு முன் வட இந்தியாவின் வெப்பநிலையானது 46°C வரை உயருகிறது.

(ii) இப்பருவக்காற்றின் இடி மற்றும் மின்னலுடன் கூடிய துவக்கம் (தென் இந்தியாவில்) "பருவமழை வெடிப்பு" எனப்படுகிறது.

**24. மாங்கனீசின் பயன்கள் :**

(i) மாங்கனீசு எப்பொழுதும் இரும்பு லேட்ரைட் மற்றும் பிற தாதுக்களுடன் கலந்து காணப்படும். இது இரும்பு எஃகு மற்றும் உலோகக் கலவை உற்பத்திக்கு அடிப்படையான மூலப்பொருள் ஆகும்.

(ii) வெளுக்கும் தூள், பூச்சிக்கொல்லிகள், வண்ணப்பூச்சிகள், மின்கலன்கள் போன்றவை தயாரிப்பதற்கு மாங்கனீசு பயன்படுகிறது.

**25.** (i) குடியரசுத் தலைவர், ஒற்றை மாற்று வாக்கு மூலம் விகிதாச்சார பிரதிநிதித்துவத்தின்படி வாக்காளர் குழுமத்தால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

(ii) வாக்காளர் குழுமம் என்பது மாநிலங்களவை மற்றும் மக்களவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், அனைத்து மாநில சட்டமன்ற உறுப்பினர்கள். தேசிய தலைநகர் டெல்லி, மற்றும் புதுச்சேரியின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஆகியோரை உள்ளடக்கியதாகும்.

**26.** (i) பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் – வடமேற்கு
(ii) சீனா, நேபாளம், பூடான் – வடக்கு
(iii) வங்காளதேசம் – கிழக்கு
(iv) மியான்மர் – தூரக்கிழக்கு
(v) இலங்கை – தென்கிழக்கு
(vi) மாலத்தீவு – தென்மேற்கு

**27. உலகமயமாக்கலின் நேர்மறையான தாக்கம்:**

(i) ஒரு சிறந்த பொருளாதாரம், மூலதன சந்தையின் விரைவான வளர்ச்சியை அறிமுகப்படுத்துகிறது.

(ii) வாழ்க்கைத் தரம் அதிகரித்துள்ளது.

**28.** பிரதான வாகனத் தொழிற்சாலைகளும் அதனை சார்ந்த தொழிற்சாலைகளும் சென்னையை சுற்றியுள்ள பகுதிகளில் இருப்பதால் சென்னை ஆசியாவின் டெட்ராய்ட் என்று அழைக்கப்படுகிறது.

## பகுதி - III

**29.** (i) முத்துலட்சுமி அம்மையார்

(ii) சோலைக்கரடு

(iii) ஆறு

(iv) கெஸ்டபோ

(v) வேளாண்மை

**30. பன்னாட்டுச் சங்கத்தின் பணிகள் :**

(i) 1920 – 1925 ஆகிய ஆண்டுகளிடையே பன்னாட்டுச் சங்கம் பல சிக்கல்களைத் தீர்த்து வைக்க அழைக்கப்பட்டது.

(ii) மூன்று பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதில் சங்கம் வெற்றி பெற்றது. 1920 இல் பின்லாந்தின் மேற்குக் கடற்கரைக்கும் சுவீடனின் கிழக்குக் கடற்கரைக்கும் இடையில் அமைந்திருந்த ஆலேண்டு தீவுகள் யாருக்குச் சொந்தம் என்பதில் பின்லாந்திற்கும் சுவீடனுக்குமிடையே பிரச்சனை ஏற்பட்டது.

(iii) பன்னாட்டுச் சங்கம் அத்தீவுகள் பின்லாந்திற்கே உரியது என தீர்ப்பளித்தது.

(iv) அடுத்த ஆண்டில் போலந்திற்கும் ஜெர்மனிக்குமிடையே மேலை சைலேஷியா பகுதியில் எல்லைப் பிரச்சினை ஏற்பட்டு, பிரச்சனையைத் தீர்த்து வைக்கச் சங்கம் அழைக்கப்பட்ட போது அப்பிரச்சினையைச் சங்கம் வெற்றிகரமாகத் தீர்த்து வைத்தது.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com
www.surabooks.com



(v) 1925 இல் மூன்றாவது பிரச்சனை கிரீஸ், பல்கேரியா நாடுகளிடையே ஏற்பட்டதாகும்.

(vi) 1925 ஆம் ஆண்டு லொக்கார்னோ உடன்படிக்கை கையெழுத்தாகின்றவரை பன்னாட்டுச் சங்கம் வெற்றிகரமாகவே செயலாற்றியது.

(vii) லொக்கார்னோ உடன்படிக்கையின் படி ஜெர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம், இங்கிலாந்து, இத்தாலி ஆகிய நாடுகள் மேற்கு ஐரோப்பாவில் பரஸ்பரம் அமைதிக்கு உத்தரவாதமளித்தன.

(viii) இதன் பின்னர் ஜெர்மனி பன்னாட்டுச் சங்கத்தில் இணைந்தது. பாதுகாப்புக் குழுவிலும் நிரந்தர இடமளிக்கப்பட்டது.

(ix) இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் அமெரிக்காவும் ரஷ்யாவும் சங்கத்தினுடைய அரசியல் அல்லாத நடவடிக்கைகளில் பங்கேற்கத் தொடங்கின.

**31. சிம்லா மாநாடு :**

(i) வேவல் திட்டம் மூலமாக அரசப்பிரதிநிதியின் செயற்குழுவில் இந்துக்களும் முஸ்லீம்களும் சம எண்ணிக்கையில் இடம் பெற்ற ஓர் இடைக்கால அரசுக்கு வகை செய்யப்பட்டது.

(ii) எனினும், காங்கிரசும் முஸ்லீம் லீக்கும் ஓர் ஒப்பந்தத்தை எட்ட முடியவில்லை.

(iii) அனைத்து முஸ்லீம் உறுப்பினர்களும் முஸ்லீம் லீக்கில் இருந்துதான் இடம்பெற வேண்டும் மற்றும் அவர்கள் அனைத்து முக்கிய விஷயங்களிலும் வீட்டோ அதிகாரங்களையும் பெற வேண்டும் என்று ஜின்னா கோரினார்.

**அமைச்சரவை தூதுக்குழு :**

(i) பிரிட்டனின் பிரதம மந்திரியான கிளெமன்ட் அட்லி தலைமையிலான அமைச்சர்கள் தூதுக்குழு பாகிஸ்தானை தனிநாடாக உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையை நிராகரித்து பாதுகாப்பு, தகவல் தொடர்பு மற்றும் வெளியுறவு துறைகளில் கட்டுப்பாட்டுடன் கூடிய மத்திய அரசை நிறுவ வகை செய்தது.

(ii) இதில் மாகாணங்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

- முஸ்லீம்கள் பெரும்பான்மையாக இல்லாத மாகாணங்கள்.
- வடமேற்கில் முஸ்லீம்கள் பெரும்பான்மையாக உள்ள மாகாணங்கள்.
- வடகிழக்கில் முஸ்லீம்கள் பெரும்பான்மையாக உள்ள மாகாணங்கள்.

(iii) இந்திய அரசியல் சாசன நிர்ணயமன்றம் தேர்ந்தெடுக்கப்பட்டு அனைத்து சமூகங்களில் இருந்தும் பிரதிநிதித்துவம் கொண்ட இடைக்கால அரசு நிறுவப்பட வேண்டும். இந்த திட்டத்தை காங்கிரசும் முஸ்லீம் லீக்கும் ஏற்றுக்கொண்டன.

**நேரடி நடவடிக்கை நாளுக்கு முஸ்லீம் லீக் அழைப்பு விடுத்தல் :**

(i) காங்கிரஸ் ஒரு முஸ்லீம் உறுப்பினரை நியமித்ததை அடுத்து காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக் கட்சிகள் இடையே கருத்து வேறுபாடுகள் நிலவின.

(ii) 1946ஆம் ஆண்டு ஆகஸ்டு 16ஆம் நாளை 'நேரடி நடவடிக்கை நாளாக' ஜின்னா அறிவித்தார். ஆர்ப்பாட்டங்களும், கடையடைப்பு போராட்டங்களும் நடந்தது. விரைவில் அது 'இந்து – முஸ்லீம்' மோதலாக உருவெடுத்தது.

(iii) இது வங்காளத்தின் இதர மாவட்டங்களுக்கும் பரவியது. நவகாளி மாவட்டம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது.

**மவுண்ட்பேட்டன் திட்டம் :**

(i) 1947 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 3ஆம் நாள் மவுண்ட்பேட்டன் திட்டம் அறிவிக்கப்பட்டது.

(ii) இதன்படி இந்தியா மற்றும் பாகிஸ்தான் என இரண்டு பகுதிகளாக இந்தியா பிரிக்கப்பட்டது.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com
www.surabooks.com



**32.** அ) **(i)**

| | **வேளாண் சார்ந்த தொழிலகங்கள்** | **கனிமம் சார்ந்த தொழிலகங்கள்** |
|---|---|---|
| (i) | இத்தொழிலகங்கள் வேளாண் துறையிலிருந்து மூலப் பொருட்களை பெறுகின்றன. | இத்தொழிற்சாலைகள் உலோகம் மற்றும் அலோகம் கனிமங்கள் மூலப் பொருட்களைப் பயன்படுத்துகின்றன. |
| (ii) | எ.கா. பருத்தி, சணல் ஆலைகள். | எ.கா. இரும்பு எஃகு தொழிற்சாலைகள் |

**(ii)**

| | **உள்நாட்டு வணிகம்** | **பன்னாட்டு வணிகம்** |
|---|---|---|
| (i) | ஒரு நாட்டின் எல்லைக்குள் நடைபெறும் வணிகம் உள்நாட்டு வணிகம். | இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே நடைபெறும் வணிகம் பன்னாட்டு வணிகம் அல்லது அயல்நாட்டு வணிகம் என அழைக்கப்படுகிறது. |
| (ii) | உள்நாட்டு வணிகத்தில் நிலவழிப் போக்குவரத்து முக்கிய பங்காற்றுகிறது. | பன்னாட்டு வணிகத்தில் நீர்வழி மற்றும் வான்வழி போக்குவரத்து முக்கியப் பங்கு வகிக்கிறது. |

ஆ) **காரணம் :** வடக்கே உள்ள இமயமலையில் வட இந்திய ஆறுகள் உற்பத்தியாவதால் வருடம் முழுவதும் இவற்றில் நீர் வரத்து உள்ளது. கோடை காலத்தில் பனி உருகி நீராகவும், குளிர் காலத்தில் மழையினாலும் நீரைப் பெறுகின்றன. எனவே வட இந்திய ஆறுகள் வற்றாத ஆறுகள் ஆகும்.

**33.** இந்திய அரசியலமைப்புச் சட்டம் பகுதி (III) 12-லிருந்து 35-வரையுள்ள சட்டப்பிரிவுகள் அடிப்படை உரிமைகள் பற்றிக் கூறுகின்றன.

**(i) சமத்துவ உரிமை :**

பிரிவு - 14 : சட்டத்தின் முன் அனைவரும் சமம்.

பிரிவு - 15 : மதம், இனம், சாதி, பாலினம் அல்லது பிறப்பிடம் இவற்றின் அடிப்படையில் பாகுபடுத்துவதைத் தடை செய்தல்.

பிரிவு - 16 : பொது வேலைவாய்ப்புகளில் சமவாய்ப்பளித்தல்.

பிரிவு - 17 : தீண்டாமையை ஒழித்தல்

பிரிவு - 18 : இராணுவ மற்றும் கல்விசார் பட்டங்களைத் தவிர மற்ற பட்டங்களை நீக்குதல்.

**(ii) சுதந்திர உரிமை :**

பிரிவு - 19 : பேச்சுரிமை, கருத்து தெரிவிக்கும் உரிமை, அமைதியான முறையில் கூட்டம் கூடுவதற்கு உரிமை, சங்கங்கள், அமைப்புகள் தொடங்க உரிமை, இந்திய நாட்டிற்குள் விரும்பிய இடத்தில் வசிக்கும் மற்றும் தொழில் செய்யும் உரிமை.

பிரிவு - 20 : குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கான உரிமை மற்றும் தண்டனைகளிலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை.

பிரிவு - 21 : வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்திற்கு பாதுகாப்பு பெறும் உரிமை.

பிரிவு - 21A : தொடக்கக் கல்வி பெறும் உரிமை.

பிரிவு - 22 : சில வழக்குகளில் கைது செய்து, தடுப்புக் காவலில் வைப்பதற்கெதிரான பாதுகாப்பு உரிமை.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com
www.surabooks.com



**(iii) சுரண்டலுக்கெதிரான உரிமை :**

பிரிவு - 23 : கட்டாய வேலை, கொத்தடிமை முறை மற்றும் மனிதத்தன்மையற்ற வியாபாரத்தைத் தடுத்தல்.

பிரிவு - 24 : தொழிற்சாலைகள் மற்றும் ஆபத்தான இடங்களில் குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடுத்தல்.

**(iv) சமயச்சார்பு உரிமை :**

பிரிவு - 25 : எந்த ஒரு சமயத்தினை ஏற்கவும், பின்பற்றவும், பரப்பவும் உரிமை.

பிரிவு - 26 : சமய விவகாரங்களை நிர்வகிக்கும் உரிமை.

பிரிவு - 27 : எந்தவொரு மதத்தையும் பரப்புவதற்காக வரி செலுத்துவதிற்கெதிரான சுதந்திரம்.

பிரிவு - 28 : மதம் சார்ந்த கல்வி நிறுவனங்களில் நடைபெறும் வழிபாடு மற்றும் அறிவுரை நிகழ்வுகளில் கலந்து கொள்ளாமலிருக்க உரிமை.

**(v) கல்வி, கலாச்சார உரிமை :**

பிரிவு - 29 : சிறுபான்மையினரின் எழுத்து, மொழி மற்றும் கலாச்சாரப் பாதுகாப்பு.

பிரிவு - 30 : சிறுபான்மையினரின் கல்வி நிறுவனங்களை நிறுவி, நிர்வகிக்கும் உரிமை.

**(vi) அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை :**

பிரிவு - 32 : தனிப்பட்டவரின், அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும் போது, நீதிமன்றத்தை அணுகி உரிமையைப் பெறுதல்..

**34.** இந்தியாவின் பெரும் அரணாக உள்ள வடக்குமலையை மூன்று பெரும் உட்பிரிவுகளாக பிரிக்கலாம்.

(i) ட்ரான்ஸ் இமயமலைகள் (ii) இமயமலைகள்

(iii) கிழக்கு இமயமலை/பூர்வாஞ்சல் குன்றுகள்.

**(i) ட்ரான்ஸ் இமயமலை (மேற்கு இமயமலைகள்):** இம்மலைகள் ஜம்மு – காஷ்மீர் மற்றும் திபெத் பீடபூமியில் அமைந்துள்ளது. இவை “திபெத்தியன் இமயமலை” எனவும் அழைக்கப்படுகிறது. இங்குள்ள முக்கியமான மலைத்தொடர்கள் ஜாஸ்கர், லடாக், கைலாஸ் மற்றும் காரகோரம் ஆகும்.

**(ii) இமயமலைகள் :** இவை வடக்கு மலைகளின் மையப் பகுதியாக அமைந்துள்ளது. இது ஒரு இளம் மடிப்பு மலையாகும். இவை மூன்று பிரிவுகளாக பிரிக்கப்படுகிறது.

- ♦ பெரிய இமயமலைகள் / இமாத்ரி
- ♦ சிறிய இமயமலை / இமாச்சல்
- ♦ வெளி இமயமலை / சிவாலிக்

► **பெரிய இமயமலை அல்லது இமாத்ரி :**

- ♦ பெரிய இமயமலை, சிறிய இமயமலைக்கு வடக்கே மிக உயர்ந்து செங்குத்தாக அமைந்துள்ளது. இதன் சராசரி அகலம் 25 கி.மீ மற்றும் சராசரி உயரம் 6000 மீ ஆகும்.
- ♦ இமயமலையில் மிக உயர்ந்த சிகரங்களில் பெரும்பாலானவை இம்மலைத்தொடரில் அமைந்துள்ளன.

► **சிறிய இமயமலைகள் அல்லது இமாச்சல் :** இது இமய மலையின் மத்திய மலைத்தொடராகும். புகழ்பெற்ற கோடை வாழிடங்களான சிம்லா, முசௌரி, நைனிடால், அல்மோரா, ரானிகட் மற்றும் டார்ஜிலிங் போன்றவை இம்மலைத்தொடரில் அமைந்துள்ளன.

► **வெளி இமயமலை / சிவாலிக் :** இம்மலைத்தொடரானது ஜம்மு காஷ்மீரில் இருந்து அசாம் வரை பரவிக் காணப்படுகிறது. இத்தொடரின் ஒரு பகுதி ஆறுகளால் உருவாக்கப்பட்ட படிவுகளால் ஆனது. இதன் சராசரி உயரம் 1000 மீ ஆகும்.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com
www.surabooks.com



(iii) **கிழக்கு இமயமலை/ பூர்வாஞ்சல் குன்றுகள் :** இவை இமயமலையின் கிழக்கு கிளையாகும். இது வடகிழக்கு மாநிலங்களில் பரவியுள்ளது. டாப்லா, அபோர், மிஸ்மி, பட்காய்பம், நாகா, மாணிப்பூர், மிக்கீர், காரோ, காசி மற்றும் ஜெயந்தியா குன்றுகள் அனைத்தும் ஒன்றிணைந்து பூர்வாஞ்சல் மலைகள் என்று அழைக்கப்படுகிறது.

**இமய மலையின் முக்கியத்துவம் :**

(i) தென்மேற்கு பருவக்காற்றைத் தடுத்து வட இந்திய பகுதிக்கு கனமழையைக் கொடுக்கிறது.

(ii) இந்திய துணைக்கண்டத்திற்கு இயற்கை அரணாக அமைந்துள்ளது.

(iii) வற்றாத நதிகளின் பிறப்பிடமாக உள்ளது. எ.கா. சிந்து கங்கை பிரம்மபுத்திரா மற்றும் பிற ஆறுகள்.

(iv) இயற்கை அழகின் காரணமாக வடக்கு மலைகள் சுற்றுலா பயணிகளின் சொர்க்கமாகத் திகழ்கிறது.

(v) வனப்பொருட்கள் சார்ந்த தொழிலகங்களுக்கு மூலப்பொருட்களை அளிக்கிறது.

(vi) இமயமலை பல்லுயிர் மண்டலத்திற்கு பெயர் பெற்றவை.

**35.** கிராமப்புற சமுதாயம் நகர்ப்புற சமுதாயமாக மாற்றமடைவதையே நகரமயமாக்கம் என்கிறோம்.

**இந்தியாவில் நகரமயமாக்கலால் ஏற்படும் பிரச்சனைகள் :**

(i) நகர விரிவாக்கத்தை ஏற்படுத்துகிறது.

(ii) நகர்புறங்களில் மக்கள் நெரிசல் ஏற்பட வழிவகுக்கிறது.

(iii) நகர்புறங்களில் குடியிருப்புகளின் பற்றாக்குறையை உருவாக்குகிறது.

(iv) குடிசைப் பகுதிகள் தோன்ற காரணமாக உள்ளது.

(v) போக்குவரத்து நெரிசலை அதிகப்படுத்துகிறது.

(vi) குடிநீர் பற்றாக்குறையை ஏற்படுத்துகின்றது.

(vii) வடிகால் பிரச்சனைகள் உண்டாகின்றன.

(viii) திடக்கழிவு மேலாண்மையை சிக்கலாக்குகிறது.

(ix) குற்றங்கள் அதிகரிக்க காரணமாகின்றன.

**36. இந்தியாவிலுள்ள பருத்தி நெசவாலைகள் :**

(i) நெசவாலைகள் என்பது பருத்தி, சணல், கம்பளி, பட்டு மற்றும் செயற்கை இழை ஆகியனவற்றை உள்ளடக்கியதாகும்.

(ii) இந்தியா இத்துறையில் உலகின் இரண்டாம் இடத்தில் உள்ளது. பாரம்பரிய தொழில்களான கைத்தறி, கைவினைப்பொருள்கள், சிறிய விசைத்தறிகள் போன்றவை லட்சக்கணக்கிலான கிராமப்புற மற்றும் புறநகர் மக்களுக்கு வேலைவாய்ப்பினை அளிக்கும் ஆதாரங்களாக உள்ளன.

(iii) தற்போது இந்தியா பருத்தி உற்பத்தியில் உலகின் மூன்றாவது பெரிய நாடாகவும் தறிகள், நூற்பு கருவிகளின் எண்ணிக்கையில் முதன்மையான நாடாகவும் உள்ளது. தற்போது பருத்தி நெசவாலைகள் இந்தியாவின் மிக பெரிய நவீன தொழிலக பிரிவாக உள்ளது.

(iv) மும்பை மற்றும் அதன் புறநகர் பகுதியில் பருத்தியாலைகள் செறிந்து காணப்படுவதால் மும்பை, இந்தியாவின் "மான்செஸ்டர்" என்று அழைக்கப்படுகிறது.

(v) மகாராஷ்டிரா மாநிலத்தில் காணப்படும் கரிசல் மண், ஈரப்பத காலநிலை, மும்பைத் துறைமுகம் எளிதில் கிடைக்கும் நீர்மின்சக்தி, சந்தை வசதி, சிறந்த போக்குவரத்து வசதி ஆகியன மும்பையில் அதிக அளவு பருத்தி நெசவாலைகள் இருப்பதற்குக் காரணங்களாக அமைகிறது.

(vi) மகாராஷ்டிரம், குஜராத், மேற்கு வங்காளம், உத்தரப்பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் பருத்தி நெசவாலைகள் செறிந்து காணப்படுகின்றது.

(vii) தமிழ்நாட்டிலுள்ள 435 நெசவாலைகளில் 200 நெசவாலைகள் கோயம்புத்தூர் பகுதியில் அமைந்துள்ளன. இதனால் கோயம்புத்தூர் "தென்னிந்தியாவின் மான்செஸ்டர்" என்று அழைக்கப்படுகிறது.

(viii) ஈரோடு, திருப்பூர், கரூர், சென்னை, திருநெல்வேலி, மதுரை, தூத்துக்குடி, சேலம் மற்றும் விருதுநகர் ஆகியன மாநிலத்தின் பிற முக்கிய நெசவாலை நகரங்களாகும்.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com
www.surabooks.com



**37. 1. ஆங்கிலேய இந்தியாவின் இணைப்புக் கொள்கை:**

- 1840 மற்றும் 1850 களில் இரண்டு முக்கியக் கொள்கைகளின் மூலம் அதிக நிலப்பகுதிகள் இணைத்துக்கொள்ளப்பட்டன.
- **மேலாதிக்கக் கொள்கை:** ஆங்கிலேயர் தங்களை வானளாவிய அதிகாரங்கள் கொண்ட உயர் அதிகார அமைப்பாக கருதினார்கள். உள்நாட்டு ஆட்சியாளர்கள் திறனற்றவர்கள் என்ற அடிப்படையில் புதிய நிலப்பகுதிகள் இணைக்கப்பட்டன.
- **வாரிசு இழப்புக்கொள்கை:** ஆண்வாரிசு இல்லையெனில் அந்த ஆட்சியாளரது இறப்புக்குப்பின் அந்தப் பகுதி ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்படும்.

**2. இந்திய கலாச்சார உணர்வுகள் பற்றிய தீவிரத் தன்மை இல்லாதது:**

- 1806 ஆம் ஆண்டில் வேலூரில் சிப்பாய்கள் சமயக்குறியீடுகளை நெற்றியில் அணிவதற்கும், தாடி வைத்துக் கொள்வதற்கும் தடை விதிக்கப்பட்டதோடு தலைப்பாகைகளுக்கு பதிலான வட்ட வடிவிலான தொப்பிகளை அணியுமாறும் பணிக்கப்பட்டதை எதிர்த்து அவர்கள் கிளர்ச்சி செய்தனர்.
- 1824ஆம் ஆண்டு கல்கத்தா அருகே பராக்பூரில் சிப்பாய்கள் கடல்வழியாக பர்மா செல்ல மறுத்தனர். கடல் கடந்து சென்றால் தங்களது சாதியை இழக்க நேரிடும் என்று அவர்கள் நம்பினார்கள்.
- ஊதியம் மற்றும் பதவி உயர்வில் பாரபட்சம் காட்டப்படுவது குறித்தும் சிப்பாய்கள் கவலை அடைந்தனர்.

**3. கலகம்:**

- புதிய என்ஃபீல்டு துப்பாக்கிக்கு வழங்கப்பட்ட குண்டு பொதியுறையில் (காட்ரிட்ஜ்களில்), பசு மற்றும் பன்றிக் கொழுப்பில் இருந்து தயாரிக்கப்பட்ட பசை பயன்படுத்தப்பட்டதாக சிப்பாய்கள் பெரிதும் சந்தேகம் கொண்டனர்.
- அவற்றை நிரப்பும்முன் அதை வாயால் கடிக்க வேண்டி இருந்ததை இந்து, முஸ்லிம் சிப்பாய்கள் விரும்பவில்லை.
- மார்ச் 29ஆம் தேதி மங்கள் பாண்டே என்ற சிப்பாய் தனது ஐரோப்பிய அதிகாரியைத் தாக்கினார்.

**38. வெளியுறவுக் கொள்கையினை நிர்ணயிக்கும் அடிப்படைக் காரணிகள்.**

(i) நாட்டின் புவியியல் அமைப்பு மற்றும் பரப்பளவு
(ii) நாட்டின் வரலாறு, பாரம்பரியம் மற்றும் தத்துவம் அடிப்படையிலானவை
(iii) இயற்கை வளங்கள்
(iv) பொருளாதார வளர்ச்சியின் அவசியம்
(v) அரசியல் நிலைத்தன்மை மற்றும் அரசாங்க அமைப்பு
(vi) அமைதிக்கான அவசியம், ஆயுதக் குறைப்பு அணு ஆயுதப் பெருக்கத் தடை
(vii) இராணுவ வலிமை
(viii) சர்வதேச சூழ்நிலை

**39. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் கணக்கீட்டு முறைகள் :**

**(i) செலவின முறை :** இந்த முறையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்த அனைத்து இறுதிப் பண்ட பணிகளுக்கு மேற்கொள்ளும் செலவுகளின் கூட்டுத்தொகையேயாகும்.

$$Y = C + I + G + (X - M)$$

**(ii) வருமான முறை :**

- பண்டங்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள ஆண்கள் மற்றும் பெண்களின் வருமானத்தை கணக்கிட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியை இந்த முறை கூறுகிறது. வருமான முறையில் GDP ஐ கணக்கிடும் போது
- வருமானம் = கூலி + வாரம் + வட்டி + லாபம்

**(iii) மதிப்பு கூட்டு முறை :**

- மதிப்பு கூட்டு முறையில் ஒவ்வொரு இடைநிலை பண்டத்தின் மதிப்பை கூட்டினால் இறுதிப் பண்டத்தின் மதிப்பை அளவிடலாம்.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com
www.surabooks.com



- ♦ உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட அனைத்து இடைநிலை பண்டங்களின் மதிப்பை சேர்க்கும் பொழுது, பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப் பண்டங்களின் மொத்த மதிப்பு கிடைக்கிறது.
- ♦ எ.கா. இறுதிப்பண்டம் என்பது ஹோட்டலில் ஒரு கோப்பை தேனீர் உங்களுக்கு வழங்கப்படுவதாகும். அதை தயாரிக்க பயன்படுத்தப்படும் டீத்தூள், பால் மற்றும் சர்க்கரை இடைநிலை பண்டங்கள் ஆகும்.
- ♦ ஒவ்வொரு இடைநிலைப் பண்டமான டீதூள், பால் மற்றும் சர்க்கரை ஆகியவற்றின் இறுதி வெளியீடு தேனீர் கோப்பையின் மதிப்பைச் சேர்க்கின்றது.

  டீதூள் + பால் + சர்க்கரை = தேனீர்

  இடைநிலை பண்டங்களின் மொத்த மதிப்பு = இறுதிப்பண்டத்தின் மொத்த மதிப்பு


**40. கருப்பு பணம் :**

- ♦ கருப்பு பணம் என்பது, கருப்பு சந்தையில் ஈட்டப்பட்ட வருமானம் மற்றும் செலுத்தப்படாத வரிப்பணமாகும்.
- ♦ வரி நிர்வாகியிடமிருந்து மறைக்கப்பட்ட, கணக்கிடப்படாத பணம் "கருப்புப் பணம்" என்று அழைக்கப்படுகிறது.

**கருப்பு பணத்திற்கான காரணங்கள் :**

- ♦ பண்டங்கள் பற்றாக்குறை
- ♦ உரிமம் பெறும் முறை
- ♦ தொழிற் துறையின் பங்கு
- ♦ கடத்தல்
- ♦ வரியின் அமைப்பு

**41.**





enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com
www.surabooks.com



**42.**




## பகுதி - IV

**43. (அ) முதல் உலகப்போருக்கான காரணங்கள்**

**அ) ஐரோப்பிய நாடுகளின் அணி சேர்க்கைகளும் எதிர் அணி சேர்க்கைகளும் :**

(i) 1900-ல் ஐரோப்பிய வல்லரசுகளில் ஐந்து அரசுகள், இரண்டு ஆயுதமேந்திய முகாம்களாகப் பிரிந்தன.

(ii) ஒரு முகாம் மையநாடுகளான ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, இத்தாலி ஆகியவற்றைக் கொண்டிருந்தது. அவை 1882 இல் மூவர் உடன்படிக்கையை மேற்கொண்டன.

(iii) இதன்படி ஜெர்மனியும் ஆஸ்திரியாவும் பரஸ்பரம் உதவிகள் செய்து கொள்ளும். மற்றொரு முகாமில் பிரான்சும் ரஷ்யாவும் அங்கம் வகித்தன.

(iv) 1894 இல் மேற்கொண்ட உடன்படிக்கையின்படி இவ்விரு நாடுகளில் ஏதாவது ஒன்று ஜெர்மனியால் தாக்கப்படும் பட்சத்தில் பரஸ்பரம் துணை நிற்கும் என உறுதி செய்யப்பட்டது.

(v) இவ்வாறு இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய மூவரைக் கொண்ட மூவர் கூட்டு உருவாக்கப்பட்டது.

**ஆ) வன்முறை சார்ந்த தேசியம் :**

(i) தேசப்பற்றின் வளர்ச்சியோடு "எனது நாடு சரியோ தவறோ நான் அதை ஆதரிப்பேன்" என்ற மனப்பாங்கும் வளர்ந்தது.

(ii) இங்கிலாந்தின் ஆரவாரமான நாட்டுப்பற்று, பிரான்ஸின் அதி தீவிரப்பற்று, ஜெர்மனியின் வெறிகொண்ட நாட்டுப்பற்று ஆகிய அனைத்தும் தீவிர தேசியமாக போர்வெடிப்பதற்கு தீர்மானமாக பங்காற்றியது.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com
www.surabooks.com



**இ) ஜெர்மன் பேரரசின் ஆக்கிரமிப்பு மனப்பாங்கு:**

(i) ஜெர்மன் பேரரசரான இரண்டாம் கெய்சர் வில்லியம் ஜெர்மனியே உலகத்தின் தலைவன் எனப் பிரகடனம் செய்தார்.

(ii) இந்நிலையில் ஜெர்மனியின் ஆக்கிரமிப்பு இயல்பு கொண்ட அரசியல் விவேகத்தையும் விரைவாகக் கட்டப்படும் அதன் கப்பற்படை தளங்களையும் கண்ணுற்ற இங்கிலாந்து, ஜெர்மன் கப்பற்படை தனக்கு எதிரானது என முடிவு செய்தது.

(iii) ஆகவே இங்கிலாந்தும் கப்பற்படை விரிவாக்கப் போட்டியில் இறங்கவே இரு நாடுகளுக்கிடையிலான பதற்றம் மேலும் அதிகரித்தது.

**ஈ) பிரான்ஸ் ஜெர்மனியோடு கொண்ட பகை :**

(i) பிரான்சும் ஜெர்மனியும் பழைய பகைவர்களாவர்.

(ii) 1871 இல் ஜெர்மனியால் தோற்கடிக்கப்பட்ட பிரான்ஸ் அல்சேஸ், லொரைன் பகுதிகளை ஜெர்மனியிடம் இழக்க நேரிட்டது.

(iii) மொராக்கோ விவகாரத்தில் ஜெர்மனியின் தலையீடு இக்கசப்புணர்வை மேலும் அதிகரித்தது.

(iv) மொராக்கோவில் பிரான்சின் நலன்கள் சார்ந்து, இங்கிலாந்து பிரான்சோடு மேற்கொண்ட ஒப்பந்தத்தை ஜெர்மனி எதிர்த்தது.

**உ) பால்கன் பகுதியில் ஏகாதிபத்திய அரசியல் அதிகாரத்திற்கான வாய்ப்பு :**

(i) 1908 இல் துருக்கியில் ஒரு வலுவான, நவீன அரசை உருவாக்கும் முயற்சியாக இளம்துருக்கியர் புரட்சி நடைபெற்றது.

(ii) பாஸ்னியாவையும் ஹெர்சகோவினாவையும் தான் இணைத்துக் கொண்டதாக ஆஸ்திரியா அறிவித்தது. ஆஸ்திரியாவின் இவ்வறிவிப்பு செர்பியாவில் தீவிரமான எதிர்ப்பைத் தூண்டியது.

(iii) ஆஸ்திரியாவிற்கும் செர்பியாவிற்குமான இப்பகை 1914 இல் போர் வெடிக்கக் காரணமாயிற்று.

**ஊ) பால்கன் போர்கள் :**

(i) பதினெட்டாம் நூற்றாண்டின் முதல்பாதியில் தென்மேற்கு ஐரோப்பியாவில் துருக்கி வலிமை வாய்ந்த நாடாகத் திகழ்ந்தது.

(ii) பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பாதியில் துருக்கியப் பேரரசின் உறுதியற்ற அரசியல் பொருளாதாரச் சூழலைச் சாதகமாகக் கொண்டு கிரீசும் அதனைத் தொடர்ந்து ஏனைய நாடுகளும் ஒன்றன் பின் ஒன்றாகத் தங்களைத் துருக்கியின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்துக் கொண்டன.

(iii) 1912 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் அவை பால்கன் கழகம் என்ற அமைப்பை உருவாக்கின.

(iv) இக்கழகம் முதல் பால்கன் போரில் (1912 – 1913) துருக்கியப் படைகளைத் தாக்கித் தோற்கடித்தன.

(v) 1913 ஆகஸ்டு திங்களில் கையெழுத்திடப்பட்ட புகாரெஸ்ட் உடன்படிக்கையோடு இரண்டாம் பால்கன் போர் முடிவடைந்தது.

**எ) உடனடிக் காரணம் :**

(i) 1914 ஜுன் 28ம் நாள் ஆஸ்திரியப் பேரரசரின் மகனும் வாரிசுமான பிரான்ஸ் பெர்டினாண்டு, பிரின்ஸப் என்ற பாஸ்னிய செர்பியனால் கொலை செய்யப்பட்டார்.

(ii) ஆஸ்திரியா இதனை செர்பியாவைக் கைப்பற்றுவதற்கான வாய்ப்பாக எண்ணியது.

(iii) ஆகஸ்டு திங்கள் முதல் நாள் ஜெர்மனி ரஷ்யாவிற்கு எதிராக போர் அறிவிப்பு செய்தது.

(iv) பெல்ஜியத்தின் நடுநிலைமையை மதியாது அதனை ஜெர்மனி தாக்கவே இப்போரில் இங்கிலாந்து பங்கேற்பது கட்டாயமாயிற்று.

**(அல்லது)**

**(ஆ) வீரபாண்டிய கட்டபொம்மனின் கலகம் (1790 - 1799) :**

(i) பாஞ்சாலங்குறிச்சியின் பாளையக்காரராக தனது முப்பதாவது வயதில் வீரபாண்டிய கட்டபொம்மன் பொறுப்பேற்றார்.

(ii) கம்பெனி நிர்வாகிகளான ஜேம்ஸ் லண்டன் மற்றும் காலின் ஜாக்சன் என்போர் இவரை அமைதியை விரும்பும் மனம் கொண்டவராகவே கருதினர்.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com
www.surabooks.com



(iii) எனினும் தொடர்ந்து நடந்த சம்பவங்கள் கட்டபொம்மனுக்கும், கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் மோதல்போக்கை ஏற்படுத்தின.

(iv) அனைத்துப் பாளையங்களிலிருந்தும் வரிகளை வசூலிக்க கம்பெனி அதன் ஆட்சியர்களை நியமித்தது. இதுவே கட்டபொம்மனுக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே பெரும் பகை ஏற்பட அடிப்படையானது.

**ஜாக்சனோடு ஏற்பட்ட மோதல் :**

(i) கட்டபொம்மனிடமிருந்து வசூலிக்க வேண்டிய நிலவரி நிலுவையை வசூலிக்க ஜாக்சன் என்ற கர்வமுள்ள ஆட்சியர் இராமநாதபுரத்தில் வந்து தன்னைச் சந்திக்குமாறு கட்டபொம்மனுக்கு அவர் ஆணை பிறப்பித்தார்.

(ii) இறுதியாக 1798 செப்டம்பர் 19 அன்று கட்ட பொம்மன் இராமநாதபுரத்தில் ஜாக்சனைச் சந்தித்தார்.

(iii) ஆணவத்தின் மொத்த உருவமாகத் திகழ்ந்த ஜாக்சனின் முன்பு கட்டபொம்மன் மூன்று மணி நேரம் நிற்க வைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

(iv) ஆபத்தை உணர்ந்த கட்டபொம்மன் தனது அமைச்சரான சிவசுப்ரமணியனாருடன் தப்பிச்செல்ல முயன்றார்.

(v) உடனடியாக ஊமைத்துரை தனது ஆட்களோடு கோட்டைக்குள் நுழைந்து கட்டபொம்மன் தப்ப உதவினார்.

**மதராஸ் ஆட்சிக்குழுவின் முன்பாக ஆஜராதல் :**

(i) மதராஸ் ஆட்சிக்குழு, தன் முன்பாக ஆஜராகும்படி கட்டபொம்மனைப் பணித்தது.

(ii) கட்டபொம்மன் குழுவின் முன்பாக ஆஜராகி இராமநாதபுரத்தில் நிகழ்ந்தவற்றை விளக்கினார். கட்டபொம்மன் குற்றவாளி அல்ல என்று குழு முடிவு செய்தது.

(iii) ஜாக்சன் நிரந்தரப் பணி நீக்கம் செய்யப்பட்டார்.

(iv) கட்டபொம்மனும் நிலுவைத் தொகையில் 1080 பகோடாக்கள் நீங்கலாக பிற நிலுவைத் தொகையினைச் செலுத்தியிருந்தார்.

**கட்டபொம்மனும் பாளையக்காரர்களின் கூட்டமைப்பும் :**

(i) தென்னிந்தியக் கூட்டமைப்பை சிவகங்கையின் மருதுபாண்டியர் ஏற்படுத்தினார்.

(ii) இக்கூட்டமைப்பு கட்டபொம்மனின் ஆர்வத்தைத் தூண்டியது.

(iii) மருது சகோதரர்களும், கட்டபொம்மனும் இணைந்து ஆங்கிலேயரை எதிர்ப்பது என்று முடிவெடுத்தார்கள்.

(iv) சிவகிரி பாளையக்காரரைத் தங்களோடு இணைக்க முயன்றார். அவர் அதற்கு மறுத்தார்.

(v) அதனால் சிவகிரியை நோக்கி கட்டபொம்மன் முன்னேறினார்.

(vi) கட்டபொம்மன் சிவகிரி நோக்கியப் படைநகர்வை தங்களுக்கு விடப்பட்ட சவாலாகவே கம்பெனியார் கருதினர்.

**பாஞ்சாலங்குறிச்சி முற்றுகை :**

(i) கட்டபொம்மனின் பிடிகொடுக்காத பதிலால் மேஜர் பானெர்மென் கோட்டையைத் தாக்கினார்.

(ii) பானெர்மென் செப்டம்பர் 5 அன்று முழுப் படைகளையும் பாஞ்சாலங்குறிச்சியில் கொண்டு வந்து நிறுத்தினார்.

(iii) அவர்கள் கோட்டையின் அனைத்துத் தொடர்புகளையும் துண்டித்தார்.

(iv) பானெர்மென் இராமலிங்கரை தூதனுப்பி கட்டபொம்மனைச் சரணடையுமாறு கேட்டுக்கொண்டார். கட்டபொம்மன் மறுத்தார்.

(v) கோட்டையின் இரகசியங்கள் அனைத்தையும் இராமலிங்கர் சேகரித்தார்.

**கட்டபொம்மன் தூக்கிலிடப்படல்:**

(i) கட்டபொம்மன் புதுக்கோட்டைக்குத் தப்பிச் சென்றார். பிரிட்டிஷார் அவரது தலைக்கு ஒரு வெகுமதியை நிர்ணயித்தனர்.

(ii) எட்டையபுரம் மற்றும் புதுக்கோட்டை அரசர்களால் துரோகமிழைக்கப்பட்ட கட்டபொம்மன் இறுதியில் பிடிபட்டார்.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com
www.surabooks.com




(iii) பானெர்மென் விசாரணை என்ற பெயரில் ஒரு கேலிக்கூத்தை பாளையக்காரர்களின் முன்பாக அக்டோபர் 16 அன்று அரங்கேற்றினார்.

(iv) விசாரணையின் போது கட்டபொம்மன் தன்மீது சுமத்தப்பட்ட அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் ஏற்றுக்கொண்டார்.

(v) திருநெல்வேலிக்கு மிகஅருகேயுள்ள கயத்தாறின் பழையகோட்டைக்கு முன்பாக இருந்த புளியமரத்தில் சகப் பாளையக்காரர்களின் முன்னிலையில் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார்.

(vi) இவ்வாறு போற்றுதலுக்குரியவராகத் திகழ்ந்த பாஞ்சாலங்குறிச்சியின் பாளையக்காரர் கட்டபொம்மனின் வாழ்க்கை முடிவுற்றது.

**44. (அ)**





(அல்லது)

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net. www.Trb Tnpsc.Com
www.surabooks.com



(ஆ)




❖ ❖ ❖

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com